செ.வெ.எண்:373/2009(செமதொஅ) நாள். 01.11.2009

காஞ்சிபுரம் மாவட்டம், தாம்பரத்தில் உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை சார்பாக நடைபெறும் விழாவில் மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்து கொள்கிறார்.

காஞ்சிபுரம் மாவட்டம், தாம்பரம் ரயில் நிலையம் அருகில் 02-11-2009 அன்று உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை சார்பாக மாநில நுகர்வோர் தொலைத் தொடர்பு உதவி மையம் தொடக்க விழா, நியாய விலை கடைகளுக்கு மின்னனு பட்டியல் இயந்திரம் வழங்கும் விழா, 251 நியாய விலைக்கடைகளுக்கு புதிய கட்டடம் கட்டும் பணி தொடக்க விழா, இலவச எரிவாயுடன் கூடிய அடுப்பு வழங்கும் விழா மற்றும் தாம்பரம் உதவி ஆணையர் அலுவலக புதிய கட்டட அடிக்கல் நாட்டு விழா ஆகிய விழா மிகவும் சிறப்பாக நடைபெறவுள்ளது.

இந்த விழாவில் மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு மாநில நுகர்வோர் தொலைத் தொடர்பு உதவி மையத்தை தொடங்கி வைத்து, நியாய விலை கடைகளுக்கு மின்னனு பட்டியல் இயந்திரம் வழங்கி, நியாய விலைக்கடைகளுக்கு புதிய கட்டடம் கட்டும் பணியை தொடங்கி வைத்து,, இலவச எரிவாயு இணைப்புடன் கூடிய அடுப்பு வழங்கி, தாம்பரம் உதவி ஆணையர் அலுவலக புதிய கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டி விழா பேருரையாற்ற உள்ளார். விழாவில் மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு அவர்கள் தலைமை வகிக்கிறார். மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள், திருப்பெரும்புதூர் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.டி.ஆர்.பாலு, தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் திரு.எஸ்.ஆர்.இராஜா, மாவட்ட ஊராட்சிக்குழுத் தலைவர் திரு.த.துரைசாமி ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்.

விழாவில் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை முதன்மை செயலர் திரு.க.சண்முகம் இ.ஆ.ப., கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் திரு.யத்தீந்திரநாத் ஸ்வேன் இ.ஆ.ப., உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை ஆணையர் திரு.எம்.வீரசண்முக மணி இ.ஆ.ப. மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் தலைவர்கள், மக்கள் பிரதிநிதிகளே மற்றும் அரசுத்துறை அலுவலர்கள் கலந்து கொள்ள உள்ளார்கள். விழா முடிவில் உணவு வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை ஆணையாளர் திரு.க.ராஜராமன் இ.ஆ.ப. அவர்கள் நன்றியுரையாற்றவுள்ளார். எனவே, விழாவில் தாங்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தோஷ் கே.மிஸ்ரா இ.ஆ.ப. அவர்கள் கேட்டுக் கொள்கிறார்.

செய்தி வெளியிடுபவர்,

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
காஞ்சிபுரம்